ஓலை 33 | ஓசை 127 | பிப்ரவரி 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**இழுக்க லுடையுழி ஊற்றுக்கோ லற்றே**
**ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.**

ஒழுக்கமுடைய சான்றோரின் வாய்ச் சொற்கள், வழுக்கல் உடைய சேற்று நிலத்தில் ஊன்றுகோல் போல் வாழ்க்கையில் உதவும்.

**Translation:**

Like staff in hand of him in slippery ground who strays
Are words from mouth of those who walk in righteous ways.

**Explanation:**

The words of the good are like a staff in a slippery place.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில் இணைய–9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்


அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# பாவாணர் சுவடுகளைப் போற்றுவோம்



மீதவநேயப்பாவாணர்

ஞானமுத்து வள்ளியம்மை மகவாய் உதித்தவர்
இன்னலை இன்பமாய் ஏற்றே கற்றவர்
மதுரை தமிழ்ச் சங்கத் தேர்வில்
தனி ஒருவராய் சிறப்பாகத் தேர்ந்தவர்
தமிழ் நாட்டுத் தமிழறிஞர் சொல்லாராய்ச்சி வல்லுநர்
மொழிகளின் சொல் இயல்புகளைக் கற்றவர்
மறைமலையடிகள் வழிநின்று தனித்தமிழ் வளர்த்தவர்
மொழிஞாயிறு என்று மாணவரால் புகழாரம் பெற்றவர்
தமிழ் உலக மொழிகளில் மூத்தது
தனக்கெனத் தனி அழகுடன் பூத்தது
பிற மொழிகளின் வளர்ச்சிக்கு வித்திட்டது
என்றே ஆராய்ச்சி முடிவு தந்தவரே
பயின்ற பள்ளிக்கே ஆசானாய் வந்தவரே
இராசகோபாலரிடம் இசையை ஆசையோடு பயின்றவரே
சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில்
மொழியாராய்ச்சித் துறையில் பணி புரிந்தவரே
உலகத் தமிழ்க் கழகத்தை உருவாக்கினீர்
அகர முதலிக்கு அடிக்கல் நாட்டினீர்
தமிழர் பிறந்தகம் குமரியெனத் தீர்மானித்தீர்
பல நூல்கள் எழுதி ஒல்காப்புகழ் பெற்றீர்



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# காற்றில் உந்தன் கீதம் காலமெலாம் வாழும்

ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடலென
எங்கிருந்தோ ஒரு குரல் வந்தது!- அது
எந்த தேவதையின் குரலோ? எனப்பலரும்
பாடும் வண்டைப் பார்த்துக் கேட்டனரே!
தித்திக்கும் குரலுடனே முத்தமிழில் பாடவந்தாய்!



அன்பு மேகத்தை அழைத்தாய் பாடலொன்றில்!
அமுத தமிழில் பாடுவதில் புதுமை!
தேய்ந்தும் ஒளிவீசும் நிலவின் நிலையை
மேகத்திடம் உருகி உரைத்தாய் உன்குரலில்!

மல்லிகை,முல்லை பூப்பந்தல் எதெற்கென்றால்
கல்யாணத் திற்காகவென பாடலொன்று சொல்லியதே!
பொன்னான மலரென்று மல்லிகையை நீகூற
இன்றைக்கு ஏனிந்த ஆனந்தமோ? எனப்பாடி
மணம்கூடி மயங்கினவே மல்லிகைப் பூவெல்லாம்!

பொங்கும் கடலோசையில், தண்ணீரில் ஓடங்களைத்
தாலாட்டிக் கொஞ்சியது உந்தன் குரலோசை!
நிழல் நிஜமாகி இலக்கணம் மாறியது!
மழைக்காலமும் பனிக்காலமும் சுகமாக மாறினவே!

கருவிலேயே கலைவாணி வரமருள, உன்குரலில்
கவிதை கேளுங்கள் எனப்பாடி வியக்கவைத்தாய்!
நாதமெனும் கோவிலிலே ஞானவிளக்கேற்றி வைத்தாய்!
நானே நானா? யாரோதானா? என உன்
கானத்தில் மயங்கியோர் வினவிக் கிடக்கின்றார்!

அம்மானை பாடினாய்! அந்தமான் அழகென்றாய்!
ஆலமரத்துக் கிளியிடம் பேசினாயே பாடல்வழி!
நான் உங்கள் வீட்டுக் கிளிதான் என்றுரைத்து
யாரது சொல்லாமல் நெஞ்சள்ளிப் போனது?
வேறுயார்? வேலூரில் தோன்றிய கலைவாணி!

வாணிஜெயராம் என்றால் அறியாதார் யாருமுண்டோ?
பத்தொன்பது மொழிகளில் பல்லாயிரம் பாடல்கள்!
பத்மபூஷண் விருதினைப் பெறுமுன் ஏன் மறைந்தாயோ?
பேர்சொல்லும் பாடல்கள்! பேரிழப்பில் இசையுலகு!
காற்றுள்ள வரையில் உன்கானம் ஒலித்திருக்கும்!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# கனவும் நினைவும்

ஆசைகள் கோடி அகத்தில் கூடி
பேசிடும் மொழியே பிறையின் வழியே
இமைகளை மூடி இதமாய் தேடி
சுமைகளை மறக்கும் சூட்சம சிறகாம்

கனவினைத் திறக்க கற்பனை பிறக்கும்
நினைவுகள் நெஞ்சில் நித்தமும் கெஞ்சும்
எல்லைகள் இன்றி எங்கும் மின்னும்
வில்லென ஏற்றி விதியை மாற்றும்



கண்களில் மலரும் காட்சியும் விலகா
எண்ணம் முழுதும் எழிலாய் உழுகும்
எங்கோ என்றோ இடையில் நின்றே
தங்கும் கனவில் தன்னிலை புனைந்தே

இலக்கை விதிக்கும் இனிதாய் பதிக்கும்
வலமும் வந்தே வளமும் தந்திடும்
கலாமும் சொன்னார் கனவின் முன்னுரை
பலாவாய் சுவைக்கும் பற்றினால் அவையில்

உறக்கம் விடுத்தே உழைப்பை எடுத்து
திறப்பாய் நீயும் திறனும் பாய
கனவுகள் துரத்தும் கடமை வரவில்
மனமும் மகிழ்வில் மலரும் தகவாய்

விழிக்குள் திரையை விதித்தே உரையை
செழிப்பாய் விதைக்கும் சிந்தையின் புதையல்
இருளின் வலியை இரவும் விலக்கும்
அரும்பும் கனவில் ஆழ்ந்த மனமே

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

# கள்ளாமை

(அதிகாரம் : 29)




அடுத்தவன் பொருளை
அவனை வஞ்சித்து.
அபகரித்துக் கொள்தலே
கள்ளத்தனம் என்றாகும்.

உலகோர் இகழாமல்
உத்தமமாய் வாழ.
எத்தகைய பொருளையும்
எவரிடமும் வஞ்சியாதே.

குற்றங்களை மனதினால்
நினைத்தலும் குற்றமே.
அடுத்தவன் பொருளை
எடுத்தலும் குற்றமே.

வஞ்சித்து சேர்க்குஞ்செல்வம்
பெருகுவதாய்த் தோன்றிடினும்.
வந்ததுபோல் ஒருநாள்
விரைந்து ஓடிப்போகும்.

களவு செய்தலில்
உண்டாகும் இன்பம்.
பயன் விளைதலில்
தொலையாத துன்பமாகிடும்.

அருளை பெரிதெனக்கொள்வார்
அன்புடையோர் ஆதலால்.
கள்வரல்லாதாராகி பிறரின்
சோர்வை காணார்.

களவாசை முதிர்ந்தவர்
அளவறிந்து வாழும்.
நெறியில் நின்று
ஒருபோதும் ஒழுகார்.

அளவறிந்து வாழ்வோரின்
நெஞ்சில் அறம்நிற்கும்.
களவறிந்தோர் நெஞ்சத்தில்
வஞ்சமே நிலைபெறும்.

அறநெறிகளை கடைபிடித்து
பொருளீட்டி வாழாதார்.
அளவில்லா துன்பமடைந்து
அப்போதே கெட்டழிவார்.

களவு செய்வோர்க்கு
உயிர்வாழ்வு தவறிப்போகும்.
களவறியாதோர்க்கு தேவலோகம்
வாய்க்கத் தவறாது.

**கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்**

# வீணடித்தல்

கோவிலில் கொடுக்கப்பட்ட
அளவுக்கு மீறிய
அன்னதானமும் அனாதையானது
குப்பைத் தொட்டியில்



கவிஞர் விக்னேஷ்,வேலூர்

# காதல்



நான்
உன்னைப் பார்க்கையில்
நீ
மண்ணைப் பார்க்கிறாய்

நீ
என்னைப் பார்க்கையில்
நான்
விண்ணைப் பார்க்கிறேன்

விண்ணுக்கும்
மண்ணுக்கும்
அல்லாடியபடி
நம்
கா...த...ல்...!

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# வாப்பம்மா

ஆலமரத்தின் ஆணி வேர் நீ
நெடுநெடுவென வளர்ந்து
ஓர்தண்டில் பல கிளைகளைப்
பரப்பிப் பரந்திருந்தாய்.



கிளையைத் தேடி வரும்
பறவைக் கூட்டம் போல
உன்னை நாடி வரும் உறவுகளை
சேர்த்து வைத்திருந்தாய்.

நிழலாய் உதவும் உன்
கரம் செய்த கொடைகள்
எவரிலும் மறவாமல்
நிலைத்திருக்கும் காலங்காலமாய்.

பெற்றதென்னவோ ஐந்து மகன்மார்
ஒருவரிடமாவது ஓர் பைசா கேட்டதில்லை.
அவர்கள் தர வேண்டுமென்ற
எவ்வித எதிர்ப்பார்ப்பிலும் வாழ்ந்ததில்லை.

எவருக்கும் தொல்லை கொடுத்து
தொந்தரவாய் இருந்ததில்லை.
அதுபோலவே உன் மறுமை
வாழ்க்கைக்கான நடையையும் தொடர்ந்தாயே.

நினைக்காப் பொழுதில்
சிறு புன்னகையுடன்
ஆலமரமே சரிந்த வண்ணம்
எம்மை விட்டு இறையடி சேர்ந்தாயே.

என்றென்றும் உம் நினைவிலும்,
உமக்கான பிரார்த்தனையிலுமே
நாம் அனைவரும்.

கவிஞர் சன்ஹா நிஜாம்,புத்தளம்

# சங்கே முழங்கு!

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றிய
மூத்தக் குடியின் ஆதி மொழியே தமிழென்று
ஏத்தி நாளும் சங்கே முழங்கு.

இல்லாமை அகன்றிட இன்புறு கல்வி
எல்லார்க்கும் எளிதாய் என்றும் கிடைந்திட
வல்லமை மிகுந்த நாடு  என்பதை
பல்லோரும் அறிந்திட சங்கே முழங்கு!

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே
சிறப்பென்று
ஏற்றத்தாழ்வில்லா எழிலான நாடாய் இருந்திட
ஏற்றம் பெற்ற உணவுஉற்பத்தி நிறை
நாடென்று
நாற்றம் நிறை மலர்தனைத் தூவியே
சங்கே முழங்கு.




லஞ்சம் வாங்காத மனிதர்கள் வாழும்
பஞ்சமில்லாத நாடென்று பலரும்
புகழ்ந்திட
நெஞ்சிலே ஈரம் நிறைந்த வள்ளல்கட்குக்
கிஞ்சித்தும் பஞ்சமில்லை என்று சங்கே முழங்கு!

மனதில் நல்லெண்ணம் தனை நிறைத்து
சினமதைத் துறந்த இன்சொல் பேசிடும்
இனம் நிறைந்த நாட்டவர் என்று
மனதாரக் கூறவே சங்கே முழங்கு!

கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

# கல்வி தந்த கனவுகளே!

கல்வி தந்த கனவுகளே பல
பல ஆசைகளை விதைத்தது மனதில்
மனதில் உதித்தது ஒரு இலக்கு
இலக்கை அடைய முயற்சியே தேவை
தேவைகள் உரு மாறியது தேடலாக
தேடல் கண்டது புது வாழ்வை
வாழ்வே ஒரு வரமாக தித்திக்க
தித்திக்குதே கல்வி தந்த கனவுகளே



கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# தைப்பூசம்


தை மாதம் தமிழருக்கு புனித மாதமே
ஆறுபடை வீடுகள் உள்ளிட்ட
முருகன் கோயிலில் திருவிழா நடை பெறுமே
பழனிக்கு தமிழகம் மட்டும் அல்லாமல்
அனைத்து பகுதி மக்களும் விரதமிருந்து
ஆயிரக்கணக்கான பக்தர்கள்
பாதயாத்திரை சென்று
முருகனை தரிசித்து
விரதத்தை நிறைவு செய்வாரே
தைப்பூசம் அன்று
சிலவலாயங்களில்
வழிப்பாடு செய்தால்
தம்பதியிடையே அன்பு அதிகரித்து
பிரியாத வரத்தைப் பெறுவாரே
தை மாத பவுர்ணமியும்
பூசம் நட்சத்திரமும்
கூடி வர சிறப்பு வழிப்பாடு செய்வதே
தைப்பூசத்தின் சிறப்பம்சமே
புண்ணிய நதியில் நீராடுவது சிறப்பே
வாழ்வில் ஒளியேற்றும்
தைப்பூச நன்னாள்
பல நற்செயலைத் தொடங்கும் நாளானதே
வள்ளலார் தை மாத வெள்ளி
புனர்பூச நட்சத்திரத்தில்
அன்று தானே ஒளியானார்
வடலூர் அருகே மேட்டுக் குப்பத்தில்
தைப்பூசம் அன்று இலட்சக்கணக்கான மக்கள்
வள்ளலார் விழா கொண்டாடினாரே
கடற்கரை தலமான திருச்செந்தூரிலும் கொண்டாடப் பட்டதே
கேரளாவில் தைப்பூயம் என்று அழைக்கப்பட்டதே
தைப்பூசம் அன்று குருவழிப்பாடு செய்வது
மிகுந்த பலனைத் தருமே



கவிஞர் ம.செ அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# விடுமுறை நாள்

வீட்டில் தானே இருக்கிறாய்?
சும்மா தானே இருக்கிறாய்?
இதைக்கூட செய்ய முடியாதா?
விடுமுறை நாளிலும் மனைவிக்கு
உதவாத கணவனின்
அனைத்து எண்ணங்களும் தவிடுபொடியானதே!
வீடு தலைகீழாய் போனதே!
மனைவிக்கு நான்கு நாட்களாக
காய்ச்சல்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# தோழமை



கவிதையில் அடக்கமுடியா
கவிதை நீ
நிறங்களில் நிறையா
நிறம்! நீ
குணங்களில் நீ
மட்டும் வேறுபட்டவள்
சிறுகுறை கூட சொல்ல
தெரியாத சிறுமி!நீ
வயதானாலும் நட்பில் நாம்
பால்யத்திலே வாழ்கிறோம்
காமமில்லா நட்புக்கு
நாம் இலக்கணமானோம்
இலக்கணபிழை நமக்கில்லையடி
சிறு சண்டையோ பெரும் போரோ
நம் நட்புக்கு
நாமே வெள்ளைக்கொடியேந்துவோம்
காலத்தால் அழியா
நட்பை விதைப்போம்
வரலாற்றில்.

கவிஞர் தமிழ்

# நீயாக சென்று விடு

ஆதரவாய் உன் சொல் மாற
மெருகேற்றி எனை நானே
முன்னேறும் அந்த கணமே

கரத்தால் கழுத்தை நெறித்து
கீழே தள்ளி நகைத்தபடி நீ உரைக்கிறாய்!
நீ என்னவள் அல்ல
என்னவள் வேறெருத்தி என

உன் பெயரோடு என் பெயர் இணைய
விரும்பி நானே சேர்த்திணைக்க
உன் விருப்பம் எனையன்றி
வேறு யாரோ



நீ
சாதாரணமாக கடக்கும்
பெயர் அவ்வளவே
ஆயினும் அப்பெயரால் எனை ரணமாக்கும்
வேதனையை நீ அறிவாயோ?
பெயரளவில் கூட நான் உனக்கானவள்
இல்லையானால் நீ எனை தேடி வந்த
காரணம் என்னவோ?
என் கரம் பற்றும் விடயம் யாதோ?

உனையே நினைத்து காதலை குருதியிலே
கரைத்து காத்திருக்கும் இவளை வெறுத்து
நீ தேவை இல்லையென விலகியவளை
விட்டு விலகாது நெஞ்சத்தில் இரசிக்க
எனை ஆயுள் தண்டனை கைதி போல
தப்பிக்கவும் முடியாது
தள்ளி நிற்க்கவும் முடியாது
ஆழியதன் நடுவிலே தத்தளிக்கிறேன்
காப்பாற்ற நின் கரம் வேண்டாம் சென்றிடு
சென்று விடு
எனை நீங்கி நீயாகச் சென்று விடு
ஒரு வாக்கியம் கூட கதைக்காது சென்றுவிடு
உன் வாழ்வைத் தேடி
உனக்கான வாழ்வைத் தேடி
உன்னவள் யாரென அவளைத் தேடி

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# பாக்கியம்

ஏழைச் சிறுமி வந்து அமர்ந்ததால்
விமோசனம் பெற்றது
நெடுநாளாய் சும்மாயிருந்த
கோயிலில் உள்ள சாமி ஊஞ்சல்.

ஏழையைச் சந்தோஷப் படுத்தியது.
நீர் தாரையில் சிறிதுநேரம் வந்து மறையும்.
முத்துக்கள்.
நீர்குமிழிகள்.

இயற்கை எப்போது
கலப்பு திருமணம் செய்தது ?
தோட்டம் முழுதும்
ரசாயன பூச்சிக்கொல்லி மருந்து வாசனை.



கவிஞர் இரா.மதிராஜ்,அலப்பட்சக்கவுண்டன் புதூர்

# எங்கிருந்தோ வந்தது?

எங்கிருந்து வந்தாய்? ஏனிங்கு வந்தாய்?
எப்படி வந்தாய்? எப்படி இப்படி
எங்களோடு நீயாய் ஒட்டிக் கொண்டாய்!



ஒருநாள் திடீரென ஓய்வு நீங்கி
எழுந்த அதிகாலையில் எந்தன் இல்லம்
வந்த உன்னை வரவேற்க மனமின்றி
விரட்டிய போதும் விடாதெம்மை ஒட்டிக்
கொண்டு ஓயாதுவுன் குரலால் "மியாவ்மியாவ்"
என்று சீறுவதேனோ? புலிதானுன் இனமென்பதாலோ?

அன்றெம் மகாகவி அருந்தமிழால் உன்னை
'வீட்டில் வளருது' பூனைக்குட்டி என்று
பாடியதால் வந்ததோ ஆணவம் உனக்கு?

"எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி தானென்றான்"
என்றுநானும் உரைப்பேனெனநீ இங்கு வந்தாயோ?
என்னில்ல வீட்டுத்தெய்வம் என்னில்லம்வர வேண்டுமெனயான்
ஏங்கியிருக்க நீயேன்வந்தாய் என்னில்லம்? எப்படிவந்தாய்?
எந்தன் குலசாமி எந்தனில்லம் வரவேண்டுமென
என்றும் நான்வழிமேல் விழிவைத்து காத்திருக்க
எங்கிருந்தோ வந்தாயே; எனக்குமுனக்கு மேதுமுறவுண்டோ
என்றடியேன் மனமும் ஏதேதோ எண்ணுகிறதே!

அடியார்களைச் சங்கடங்கள் அனுதினமும் அண்டவிடாது
அரவணைக்கும் கணபதி குழந்தையாய் இருந்தவேளை
பூனையேவுந் தன்புலிமுகத்தி லவர்பிறாண்டியதை மறவாதே;
பொங்கிய குறுதிகண்டு பயந்தோடிய கணபதியதனைத்
தன்தாய் முகத்திலும் கண்டபோது அன்னையுமை
தன்திருவாய் மலர்ந்தனள் தானேயாருயிர் எல்லாமுமென்று!
நானதை யறிந்தவன் என்பதால் பரண்டிடேனாயினும்
அனுமதியின்றி என்னில்லத்துள் வீணாய்நீ நுழைந்தால்
எட்டி உதைத்திடுவேன்; தட்டித் தூக்கிடுவேன்;
எச்சிரிக்கை செய்தேன்! எட்டியே இருநீ!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# பெண்ணே நீ வாழ்க!

சுழற்றி அடிக்கும் புயலும் நீ
ஆனந்தம் வீசும் மலரும் நீ
மதுரை கொண்ட அக்னி சிறகும் நீ
மனம் மயக்கும் வெட்கச்சிதறலும் நீ
வாகை சூடிய காளி ரூபிணியும் நீ
வாழ்வளிக்கும் உமையம்மையும் நீ
பொறுமை கொண்ட பூமாதேவியும் நீ
ரௌத்திரம் பழகிய பாரதி மகளும் நீ
கண் கவர் நதியலை ஓட்டமும் நீ
கட்டுக்கடங்கா காட்டு வெள்ளமும் நீ
சாளரம் நுழையும் நிலவொளியும் நீ
சுற்றும் பூமியின் சூரியனும் நீ
ஆயுதமாய் அல்ல உன் சுதந்திரத்தை
கேடயமாய் கையாளும் கூர்வாளும் நீ
அதிகார கைகளுக்கு விலங்கிடுவதும் நீ
அன்பின் கைகளுக்குள் அகப்படும் சிறைவாசியும் நீ
பெண்ணே - ஓ பெண்ணே
அகிலமாளும் ஆதிசக்தி நீ.



கவிஞர் கீர்த்தனா பு,பாரதியார் பல்கலைக்கழகம்,பெருந்துறை ஈரோடு

# முற்றும் தொலைத்த முற்றும்

பிரம்மாண்ட தரிசனம்
ஜொலிக்கும் கோபுரம்
நீளும் வேண்டுதல் வரிசை
யாசகமிட
அலங்காரிப்பில் கருவறை
புகழ் பாடி நகரும் ஆராதனைகள்
மணக்கும் ருசியில்
பிரசாதப் பொட்டலங்கள்
தலையிலும் முதுகிலும் வாயிலும்
குத்தி வலம் வரும் அலகுகள்
கிழமை பாராத விரதப் பலன்கள்
ஆயினும் என்ன
ஆலய வாசலில் வரவேற்பவர்
கையில் திருவோடு.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# புகழ்

இன்முகத்துடன்
இன்சொல் பேசி
இல்லையெனாது ஈதலின்
புகழ் யாதென அறிவீரோ

இதன் புகழ் அறிந்திடின்
இரப்போர்க்கும்
இல்லாதோர்க்கும்
இல்லை யென்பீரோ



பணமும் புகழும்
படைப்பாளன் உனைப்
பரீட்சித்துப் புடம் போடும்
பரீட்சைக்களமே உணர்வீரோ

பசிப்போர்க்கு பகிர்தலும்
பாதிப்பழமேனும்
உவந்தீதலும் உளமிரங்கலும்
உன் புகழ் பேசும் புரிவீரோ

இட்டுக் கெட்டான்
இங்கு யாருமில்லை
இது முதியோர் வாக்கு
இப்பிறவியில் மட்டுமன்று
இறையருள் என்றுமுண்டு

உள்ளம் இரங்கி
நல்லறங்கள் புரிவோருக்கு
என்றும் அவனருள்
சேதாரமின்றிக் கிடைத்திடும்
ஆதாரமுண்டு அறிவீரோ

உளமுவந்து உதவுவதால்
உமதுள்ளம் அடைந்திடும்
எல்லையில்லா மகிழ்ச்சியைவிட
உயிர்களுக்கு ஊதியம்
வேறேது வேண்டும் சொல்வீரோ

கவிஞர் ஆய்ஷ்,கம்பளை

# உன் ஆயுள்கைதி நான்

சொந்தங்கள் இல்லை
சொத்துகள் இல்லை என
நான் கவலைபடாத அளவிற்கு
என்னுடைய சோகத்தை
மறக்க செய்து
சொர்க்கத்தையே காட்டியது
"உன்னுடைய பாசம் மட்டும்தான்"
அதனால்தான் உன்னில் புகுந்தேன்
ஆயுள் உள்ளவரை ஆயுள் கைதியாக.



கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# என் மனைவி

அழகில்லை கடலுக்கு அலை இன்றி
அவள் இன்றி எனக்கிங்கு வாழ்வில்லை
மலைப்பாரம் தாங்குகின்ற பூமி போல
என் பாரம் சுமக்கின்ற சுமைத்தாங்கி
குழந்தை பருவம் அவள் மனது
அவள் சிரிப்பு மலர்ந்த பூ போன்றது
அவள் விழிகள் மயில் இறகு வடிவானது
அவள் தேகம் வான் மிதக்கும்
வெள்ளை மேகம் போன்றது
கோபமாய் திட்டினால்
உறைந்து போய் நிற்பாள்
பாசமாய் நான் அழைத்தால்
ஓடி வந்து கட்டியணைப்பவள்
தமிழில் "ல" எழுத்து
அவள் கூந்தல் வளைவு
அன்பு அவளுக்கு
தமிழில் உயிர் சொல்
என் பசி போக்க அவளும்
தனக்கும் பசி என்பாள்
உணவு வாங்கி கொடுத்தால்
என் தட்டு நிறைய வைப்பாள்
பாதி உணவே அவள் உண்டு
என் பானை வயிறு நிறைய வைப்பாள்
ஆடை துவைத்து
சோறு சமைத்து
தேகம் சூடு தனித்து
என்னோடு வாழ்ந்திடுவாள்
எதிர்பார்ப்பு ஏதும் இன்றி
என்னோடு மட்டும்
வாழ்தல் போதும் என்று
இறைவனிடம் இறைஞ்சி நிற்பாள்



கவிஞர் ஹஸன் எம் பஜீத்,இலங்கை

# மன "கை"யால் உவகையால் ஈவதே ஈகை!

சூரியனின் பகலொளி ஈகை
நிலவொளியின் இரவு ஈகை



பூமியின் சுழற்சியும் ஈகை
வானின் மழைத்துளியும் ஈகை

பறவைகளினால் மரம் செடிகள் ஈகை
மரங்களின் ஆக்சிஜன் ஈகை

வண்ணத்துப் பூச்சியின் அழகும் ஈகை
தேனிக்களின் தேனும் ஈகை

விலங்குகளின் கழிவுகளும் உரமாக ஈகை
பூமித்தாய் அளிக்கும் உணவும் ஈகை

பெற்றோரின் வாழ்வே பிள்ளைகளுக்கு பெரும் ஈகை
ஆசிரியரின் அறிவும் மாணவனுக்கு ஈகை

உழைப்பாளியின் உழைப்புதரும் ஈகை
எழுத்தாளரின் எழுத்தறிவு தரும் ஈகை

வாசிப்பதில் விமர்சனம் பெரும் ஈகை
உறவுகளின் உதவாகுணமே பெரும் ஈகை

தர்மவான்களின் தயாள குணமும் ஈகை
வரதட்சனை யில்லாத மணமே மகளிருக்கான பெறும் ஈகை

வளமானவர்களுக்கு வராத ஈகை
வள்ளல்பெருமக்களுக்கே உரிய ஈகை

இறைவன் படைப்பில் அனைத்தும் ஈகையே
இழிவுபடுத்தும் மனிதனுக்கு வாழ்வே பெரும் பேராசையே!

இறை தந்த இந்த வாழ்வே பெரும் ஈகைதானே!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# பயணம்

தென்றலும் வீசும்
பின் புயலும் அடிக்கும்.
காய் கனியாகும்
பின் வெம்பவும் செய்யும்.

சிறு வேறும் விருட்சமாகும்
பின் பழுத்து உதிரவும் செய்யும்.
சரணாலயத்தின் காதல்
வரும் பறவைகளின் மீது இல்லை.



பறவைகளின் காதல்
ஒருபோதும் கிளைகளில் இல்லை.
கொஞ்சிடும் குழந்தையின் மகிழ்ச்சி
கோடிகளில் புரளும் போது புரியாது.

பார்வையற்றவனின் பக்குவத்தை
பக்திமான் பேச இயலாது.
பல்லக்கில் செல்பவனின் அறம் வேறு
அதை சுமப்பவனின் அறம் வேறு.

அழுகையை அடக்கும் தாய்க்கு அதன்
வலியை வாங்க வகை இல்லை.
வருடங்கள் கடந்த குரோதமும்
சில நொடிகளில் காணாமல் போகும்.

வாழ்வே நீ தான் என இருந்ததும்
வழி மாறி போகும்.
இந்த பயணம் தான் வாழ்க்கை
பயணப்படுவதே நிதர்சனம்.

இதை அறியாத மனம் தான்
எப்போதும் பிதற்றுகிறது.
இந்த எதார்த்தம் எதுவென உணர்ந்ததால்
ஏகாந்தத்தின் எல்லை அறிவாய்.

கவிஞர் மதுகை,திருச்சி

# நினைவு ஒட்டடைகள்

வீதியில்
அனிச்சையாக
கடந்து செல்லும்
ஒரு வாசனை
உன்னை ஞாபகப்படுத்தி செல்லும்

முடிந்து போன
ஒரு உயிர்வலியின்
மிச்சசொச்சமாய்
சாலையோரப்
பூக்களின் சாயலில்
உன் முகம்

நீண்ட காலமாக
நீ அறிந்திடாத
என் கனவில்
நிபந்தனைகளற்ற
எம்மிணைப்பின்
சுவாச சம்பாஷணைகள்



உன் பிரியத்தை
கண்மூடித்தனமாக
உன் அத்தனைக் கோட்பாடுகளுடனும்
இதயத்தில்
திணித்து உயிர்
வாழ்ந்தேன்

கூன் விழுந்து
குருடாகி
புரை திரையாக
நரையோடு நடை தளர
காலப்புண்களை
ஏந்திய இதயம்.

அங்கே
உன்னுடனான
காதல் போர்க்களத்தில்
நேசக்கறைகளாலான
கறையான் புற்றுகளும்
நினைவுகளின்
ஒட்டடைக் கூடுகளும்
நிரம்பியதாய்
நிரந்தரக் குடியிருப்புகள்
மட்டுமே!

கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# பிரிதலிலும் புரிதல்

நிறம் மாறும் மனிதர்கள் என்பதுதான்
அடிக்கடி மாறும் மனிதர்களுக்கு இன்று
அனேகர் சுட்டும் பட்டம்.

உங்களுக்கு அவர்களிடத்தே மாற்றம் தெரிந்தால்
அவர்களிடமே கேட்டு விடுங்கள்
என்னவாகிவிட்டது என்று
இல்லையேல் நீங்களும்
விட்டு விலகுங்கள்.
அதுவும் சிரமம் என்றால்
மௌனமாகி விடுங்கள்.



அவ்வாறு ஏதும் செய்யாமல்
சற்றேனும் புரிந்து கொள்ளாமல்
சமுகத்தில் ஏன் அவர்களுக்கு
பட்டம் சூட்டி காயப்படுத்த வேண்டும்.

அவ்வாறு காயப்படுத்தினால் உங்களை விட
இரட்டை வேடதாரி யாரும் இருக்க முடியாது.

நீங்கள் உண்மையாக
ஒருவரை நேசித்திருந்தால்
காயப்படுத்தமாட்டீர்கள்
மாறாக உணர்ந்து
கொள்வீர்கள்.
அம்மனிதரை.

பிரிதலிலும் சரியான
புரிதல் இருந்தால்
அது தான் உண்மையான பந்தம்
யாருக்கும் கிடைக்காத சொந்தம்.

கவிஞர் சுமையா சத்தார்,நெல்லியகம்(அனுராதபுரம்)

# கானக்குயில் வாணி



மெல்லிசை எழுதிய குயிலிசை உம்குரலிசை
உன்னிசையில் வார்த்தை எல்லாம் வரமானது
தேன்சிந்திய குரலால் திசையெங்கும் தேடவைத்தாயே
தினமும் ஒலித்திடும் பாடலை பருகிட
செவிப்பசியோடு கிடந்தோம் வானொலி பெட்டியோடு
காடுமேடெல்லாம் காற்றோடு தவழ்ந்த கானத்தில்
கானகத்தையும் நெஞ்சோடு அள்ளிப் போனாயே
மன்னனையும் மல்லிகை வாசத்தில் சிறைபிடித்திட
உன்இசை யுத்தத்தில் பேரரசுகளும் கவிழ்ந்திடுமே
இசை மயக்கத்தில் மௌனமென கிடந்தோரை
வீணையினை தொட்டு தட்டிஎழுப்பிய ராகமே
ஏழு சுவரங்களையும் வரமாக்கிய கலைமகளே
உன்னிசை ரசத்தினை சுவைத்திடும் செவியும்
இளைப்பாறிட இசையாலொரு நிழலும் தந்தாயே
இசையால் இவ்வுலகையும் கடைசிவரை கட்டிப்போட்டாயே
இசைவாணி உம்குரல்மீது மரணத்திற்கும்தான் காதலோ
இசையை வசமாக்கி எடுத்துப் போனதால்
மீளாமல் தவிக்கிறோம் ஒலிக்காத உன்சுவரத்தில்
இசை அரியனையும் நீயின்றி தவிக்குதே
சொல்லாமல் நெஞ்சை அள்ளிப் போனாலும்
உன்மல்லிகை மணந்திடும் வீசும் காற்றோடு.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# கல்வி

சாதிமதம் பேதம் ஒழிய
கல்வி ஒன்றே ஆயுதமாகுமே

களவாட இயலாததொரு பொருளே
அறிவெனும் பொக்கிஷமாகும்

வாழ்வில் சிறக்க வேண்டும்
வாழ்வு வளம்பெறவும் வேண்டும்




சிறந்துவாழ வழிவகை வேண்டும்
மனநிறைவாய் வாழ்ந்திட வேண்டும்

இவையாவும் நமக்கு வேண்டுமெனில்
கல்வியறிவு நமக்கு வேண்டும்

ஆன்றோர் சான்றோர் படிக்கலையே
உயர்ந்தோராய் வளர்ந்து சிறந்தனரே

புத்தகப் படிப்பொன்றே படிப்பாகாது
அதையும்தாண்டி சிந்தனை சிறந்திட

சமூகஅறிவும் நமக்கு வேண்டும்
பட்டப்படிப்பு துணையாய் வேண்டும்

பகுத்தறிவு பக்கபலமாய் வேண்டும்
நுண்ணறிவு நுனிவிரலில் வேண்டும்

கல்விச்சாலை ஒன்றை திறப்பவரே
சிறைச்சாலைகளை மூடுபவராவார்

சிறந்த கல்வியின் பயனே
சிறந்ததொரு சமூதாயம் பிறத்தலே

எச்சமூகம் கல்வியில் சிறக்கிறதோ
அச்சமூகமே உயர்ந்து விளங்குமாம்

எட்டுதிக்கும் கல்வி பரப்பிட
எவரும் விழித்து செயல்பட

பயின்றிடுவோம் கல்வியினையே
சிறந்திடும் நமது வருங்காலத்திலே

கவிஞர் சுரேஷ் வி பி,சென்னை-19

# தோழிக்கு சமர்ப்பணம்

தோழியே! இது உனக்காக
என் வாழ்க்கையில் விலை மதிக்க முடியாத உறவு நீ




என் நிழலுக்கு இன்னொரு பெயர் கூறச் சொன்னால்
உன் பெயரைக் கூறுவேன்

நிழல் கூட இருளில் என்னை விட்டுப் பிரிந்து விடும்
உன்னிடத்திலோ அதற்கு இடமில்லை

நட்பில் பிரிவின் வலியை பிறர் கூறக் கேட்டுள்ளேன்
அவ்வலியை உணர்வதற்கு என்னை அனுமதித்ததில்லை நீ



இவ்வுலகில் நீ எனக்கு நிழலாக இருக்கிறாய்
மறுவுலகில் அர்ஷின் நிழலில் நாம் இருக்க
தூய்மையான நட்பில் என்னை வழிநடத்துகிறாய்

நான் சோர்வடையும்போது புத்துணர்வாக மாறுவாய்
நான் கவலையடையும்போது ஆறுதலாக மாறுவாய்
என் சந்தோஷத்திற்கு காரணமாக மாறுவாய்

மாறா இவ்வுலகில் எனக்காக பல வடிவங்களில் மாறினாய்

தோழியே!
உன் வாழ்க்கையில் எனக்காக நேரத்தையும்,
காலத்தையும் பூரணமாக கொடுத்ததற்கு நன்றி

கவிஞர் ஸனா தௌபீக்,முனைச்சேனை 04 (கிண்ணியா)

# சினத்தை அடக்கு

சினத்தை நீக்கு
சிந்தனையைத் தேக்கு

அடக்கிடு நாக்கு
அகிம்சையை ஆக்கு

கோபத்தை ஆளும்
மனதை உருவாக்கு



உணர்ச்சியைப் பின்னாக்கு
அறிவை முன்னோக்கு

கோபத்தீ எரிகையில்
வார்த்தைகளை நீராக்கு

சுற்றத்தை சுட்டெரிக்காமல்
நிலைமையைச் சீராக்கு

பொறுமையை
நெஞ்சில் விதைத்தே வேராக்கு

பொங்கியெழும் எண்ணங்களைத்
தகுந்தபடி வேறாக்கு

தன்மையை
என்றும் மனதில் உரமாக்கு


தன்னிகரற்ற இன்பத்தைப்
பகர்ந்தே வரமாக்கு

கோபத்தின் கோர உருவத்தைப்
பிணமாக்கு

ஞானத்தின் தேர்ச்சியால்
ஞாலத்தை மணமாக்கு.

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# லிமரிக்




கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# ஏனிந்த வினோதம்?

கல்லூரியில் காலடிபதித்த
கள்ளமில்லா நெஞ்சம்
கனவு கலையுமோஎனக்
கலங்கி நின்றது
கல்விக் கட்டணம்
கடலளவாக மலைக்க வைத்திட
கண்ணீருடன் தவிக்கிறது
கல்விக்கடன் தருவதற்கு
கதை சொல்லியது வங்கி
கட்டாயமென்கிறது அரசு
கண்டிப்பாக மறுக்கிறது வங்கி
குழப்பமாகவே வாழும் மக்கள்
கருத்தோடு படிப்பவர்க்கு
கல்வியேக் கனவாகிடுமோ?
கட்டணத்திலும் பாகுபாடு
கற்பவரின் திறமைக்கில்லை
கட்டணச் சலுகை சாதியிலிருக்கிறது
சாதிகள் இல்லையடிபாப்பா
என்னும் நாட்டில்தான்
அடிப்படைக்கல்வியிலே
கேட்கும் கேள்வி. என்னசாதி?
ஏனிந்த வினோதம்?





கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# பிரியாத வரம் வேண்டும்

அன்று ஒருவர் மனம்
ஒருவர் அறியாத
பொழுதினிலும்
உறவென்னும்
மூவெழுத்தில்
நம்பிக்கை கொண்டு
மணமாலை
சூட்டிக் கொண்டோம் ;
இன்றோ உன்னை நான்
அறிந்து கொண்டேன்
முழுதுமாய் !
என்னை நீ அறிவாயா ?
என்ற சிறு துளி
சந்தேகப் பொறி
எப்போதும் என்னை
இடர்படுத்தினாலும்
என்றென்றும் உதிர்ந்திடாத
அற்புதமான
மணமாலையாகிக்
காலமெல்லாம்
உன் மார்பில்
கவலை மறந்த
துயில் கொள்ளும்
பிரியாத வரம்
வேண்டி நிற்கிறேன்
எனதுயிரானவனே(ளே)



கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# எங்கள் மகனின் ஜனனநாள்

பூவாய் காயாய் கனியாகி
இந்த உலகத்தில் உதிர்ந்த
ஒவ்வொரு உயிருள்ள ஜீவன்களுக்கும் சமர்ப்பணம்.

படைத்தவருக்கும் படைக்கப்பட்டதற்கும்
தொடர்வண்டி போல
உறவுகள் தொடரும் முடிவு இல்லை

நான் அன்னையின் தந்தையின்
வளர்ப்பில் வளர்ந்தவள்
ஒவ்வொருவரும் அப்படித்தான்

நான் மிகவும் மகிழ்ந்த தருணம்
என்னவென்று சொல்வேன்
அறியாத வயதில் திருமணம்
என் மகன் அஜித் பிறந்தது மகிழ்ந்தேன்.

நான் மனைவியாகி தாயாய் உணர்ந்தேன்
அம்மா அழகான உச்சரிப்பு
அதை சொல்லும்போது உள்ளம் குளிர்ந்ததம்மா



நீ பிறந்த போது
உன்னை முதலில் பார்த்த முகம்
இன்னும் என் கண்ணுக்குள்

வளர்ந்து விட்டாய் உன் சின்னஞ்சிறு பருவ முடிந்து
இன்று அழகான ஆண் மகனாய்
அழகனாய் கண்ணா
உன்னை பார்க்கிறேன்

நீ எப்பொழுதும் மகிழ்ச்சி சந்தோஷம்
உன் முயற்சி அனைத்திலும்
வெற்றி அடைய வேண்டும்
கடவுளின் அருள் எப்பொழுதும்
உனக்கு பக்க பலமாக இருக்கும்
சந்தோஷமாக இரு பிறந்தநாள் வாழ்த்துக்கள் டா

அப்பா அம்மாவின் அன்பு முத்தங்கள்
மனம் சோர்வு இல்லாமல்
எடுத்த முயற்சிகள்
ஜெயம் ஜெயம் உண்டாகட்டும்

கவிஞர் பிரேமா முத்துக்குமார்,சென்னை

# பூகம்பம்

பொறுமைக்கு பூமி உவமையென்றால்
பூகம்பத்தில் புதைந்ததை என்ன சொல்ல?

மனிதனின் பாவமா?
படைத்தவன் கோபமா?
திக்கற்ற நிலையில் உயிர்கள் இங்கே!

மனிதனின் வாழ்க்கை அவ்வளவே!



கவிஞர் சா.நாகூர் பிச்சை,திண்டுக்கல்

# கள்வரை வென்ற காவலன்

மதுரை வீரன் ( காவல் தெய்வம் )
என்ற மாவீரனை குறித்து எழுதிய கவிதை.

மனிதராய் பிறந்து மதுரையில் நிலைத்த செல்வமே
மன்னராய் பிறந்து மாவீரனாய் வளர்ந்த தெய்வமே
கல்வியும், கலையும் கற்றுணர்ந்த காவலனே
கடமை தவறாது காவல் புரியும் மாவீரனே

வலிமை இருந்தும் எளிமையாய் வாழ்ந்ததாய்
பிறப்பை மறைத்ததால் குலத்தில் தாழ்ந்தாய்
கள்வர்களை வென்று காவல் புரிந்தாய்
உழைக்கும் மக்களின் உள்ளத்தில் நிறைந்தாய்

நாயக்கர்களின் காவலனே நல்வீரம் கொண்டவனே
நல்ல உள்ளம் கொண்டவருக்கு நலம் பயக்கும் மன்னவனே
கோவலனை கொன்ற ஊர் இந்த காவலனையும் கொன்றதே
மதுரை வீரனாய் உம்புகழ் மண்ணேங்கும் நின்றதே

கோபுரமாய் புகழ் கண்ட எங்கள் குல சாமியே
எல்லோரையும் வாழவைக்கும் ஏற்றமிகு பூமியே
பார்போற்றும் தூயவனே பகுத்தறிவின் பகைவனே
கோரிக்கை உன்னிடம் வைக்கின்றேன்
குறைகளை தீர்த்திட வேண்டுகிறேன்

நோய் நொடிகள் அநீதிகள் அழிந்து ஓட வேண்டும்
உலகெங்கும் பஞ்சங்கள் பறந்து ஓட வேண்டும்
குடும்பத்தில் குழப்பங்கள் அகன்று ஓட வேண்டும்
குழந்தைகள் படிப்பிலே ஒளி காண வேண்டும்




செய்கின்ற தொழில்தனில் ஏற்றங்கள் வேண்டும்
ஏழையின் வாழ்வில் மாற்றங்கள் வேண்டும்
உலகெங்கும் அமைதியை நிலைநாட்டம் வேண்டும்
விவசாயின் வாழ்க்கையில் முன்னேற்றம் வேண்டும்

பண்பாடும், பகுத்தறிவும் பறைசாற்ற வேண்டும்
பாரே வியக்கும் நாடாக பாரதம் திகழ வேண்டும்
இயற்கை செழிக்க நல்மழை பொழிந்திட வேண்டும்
அனைத்து உயிருக்கும், சமமென அகிலம் திகழ வேண்டும்

கவிஞர் ஜெ.சிவக்குமார் ஜெயபாலன்,அருளாவடி

# ஔவையார்

கால காலமாய் நாம் அனைவரும் கற்றது
ஔவையின் ஆத்தி சூடியே!
'அறம் செய விரும்பு', 'ஆறுவது சினம்'
மக்கள் மேம்பட வேண்டும் என்ற நோக்கத்தில்
பாடிய பாடல்கள் அனைத்தும் ரத்ன வரிகள்.
தனக்கு இளமை வேண்டாம், முதுமையை
வேண்டி ஆண்டவனிடம் வரம் கேட்டு பெற்று
உயர்வடைந்து, பல நூல்கள் இயற்றி
எக்காலத்திலும் அழியாத காவியத்தை படைத்த
பெண் தெய்வம்.
'ஔவைப்பாட்டி' என்று அன்போடு அழைக்க,
நீண்ட நாள் உயிர் வாழும் அபூர்வ
நெல்லிக் கனியை, தகடூர் அதியமானிடம்
பெற்று வாழ்வாங்கு வாழ்ந்தும்
மன்னர்களுக்குள், சண்டை ஏற்படா
வண்ணம் சமரசம் செய்த வழிகாட்டி.
திருக்குறள், திருவள்ளுவ மாலையில்
"அனுவைத் துளைத் தேழ் கடலைப்புகட்டிக்
குறுக தரித்த குறள்" என்று பாடியுள்ளார்.
வினாயகர் அகவலையும் தந்து
சேரமானும், சுந்தரரும் கைலைக்குச்
செல்வதற்கு முன்பே கணபதியுடன்
சென்றார்.
என்னே! அவரின் பக்தி
தன் அகந்தைக்குப் பாடம்
புகட்டிய முருகனுக்கும்
பாமாலை சூட்டிய தாய்.



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# உடன் பிறப்பு என்ற உன்னதம்

ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஓயாத சண்டைதான்
ஒன்றாய் சிறிதுநேரம் இணைந்திருந்தால் அதிசயமே
பொறிஉருண்டையிலிருந்து போட்டுக்கும் உடைவரை போட்டிதான்
கண்விழித்ததிலிருந்து இரவு படுக்கும் வரை வம்பிழுப்பதே வேலை

விளையாட்டில் யாராவது சகோதரனிடம் சண்டையிட்டால்
விளையாட்டிலிருந்து ஒதுங்கி வரும் வேகமும்
கணக்கு புரியாததால் அண்ணனை ஆசிரியர் அடித்தால்
தன்னையே அடித்தது போல் தேம்பி அழுவதும்

அண்ணன் முதல் மதிப்பெண் எடுத்தால்
தானே எடுத்தது போல் ஊரெல்லாம் சொல்லித்திரிவதும்
தம்பி தவறானவருடன் நட்பு பூண்டால்,
பார்க்குமிடத்திலேயே அடித்து அவனை திருத்துவதும்



திருவிழா நாட்களில் கலர் கண்ணாடி வாங்கி
இருவரும் மாற்றி மாற்றி அணிந்து மகிழ்வதும்
அக்காவை அன்னையாய் எண்ணி மகிழ்வதும்
தங்கையை மகளாய் நினைத்து கொள்வதும்

திருமண பந்தத்தில் நுழையும் வரை இயல்பானதே
தனக்கென்று குடும்பம் வந்தால் எல்லாம் தளருது
தம்பியை தனிக்குடும்பமாய் பார்க்க கற்றுக் கொண்டோம்
அண்ணனை அண்டை வீட்டாரை எண்ணுகிறோம்

அண்ணனை விட எந்தவிதத்திலும் குறையாமல் வாழவும்
தங்கையை விட மகளுக்கு அதிக சீர்செய்யவும்
தம்பி வீட்டைவிட பெரிய பங்களா கட்டவும்
அக்காவை விட ஆடம்பரமாய் வாழவும் கற்றுக் கொண்டோம்

இதோ அம்மாவின்
இறுதி ஊர்வலத்தில் தான்.
இணைந்திருக்கிறோம்
ஒவ்வொரு திசையிலிந்து வந்திருக்கிறோம்
அண்ணன் தம்பிகள் இணைய அம்மா மரணித்தாள்
மரணங்கள் மட்டுமே நம்மை இணைக்கிறது

மற்றுமொரு மரணத்திற்காய் காத்திராமல் மனிதம் காப்போம்
மறுபடியும் ஒரே வயிற்றிலா பிறக்கப் போகிறோம்?

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# மழலைக்குள் மனிதம்



ஆறறிவு ஐயறிவு
பாகுபாடு உணராதவர்கள்
அன்பு காட்டியே
அகிலத்தை ஆள்பவர்கள்

கள்ளங்கபடமில்லா
வெண்மையுள்ளத்தின்
சொந்தக்காரர்கள்

வஞ்சகம் குரோதமற்று
வாஞ்சனை புரிபவர்கள்

உதவி செய்வதில்
பாரபட்சமில்லாத பரோபகாரிகள்

மழலையின் மனிதம்
மனிதனாக வளர்கையில்
மண்ணில் புதைவதே
மனதின் வேதனை

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

# அவன் செயல்



அவளின் கையகத்தே ஓர் தூது
நனையப் பெற்ற மயிலினம் போலும்
நடுங்கி துடிக்கிறது அவளினது மனது

அதனை கண்ணுற்ற களவான்
கைதானான் காதலான் என்னும்
மகுடவாசகத்தி உள்ளே

கலைகோயிலின் தாயவள் என எண்ணம்போலும்
கவிதை இறைத்து கனவின் அவளை
கண்ணி தனி தேசத்து பட்டத்துராணியாக்க

அவளின் நாட்டிய நயனத்தில் நாடிவிட்டான்
பணிவன்பால் கூடி ரசனை பெற்றான்

அவளிடத்தே நாயகனாகி காதல் உற்றான்,
கவியாளனின் பூர்வீக சபதம் மறந்து
கனாவின் ஊடலில் கலை காட்டுகிறான்.

சரித்திரத்தில் ஒரு காவியம் படைக்க
கண்ணுறக்கத்தில் சுவரோவியம் தீட்டி
அவளை அருகில் உள்ளாள் என எழுதிவைத்தான்.
அவன் செயலால் !

கவிஞர் வியாத்தன் ச.லக்ஷஹரன்

# தேவதைப் பெண் அவள்

தடைகளை தகர்த்தி ஓடும் அருவி அவள்
வரலாறு கானாத வரலாற்றை உருவாக்கும் சிங்கப்பெண் அவள்
கின்னஸில் கிரீடமணிய வாய்ப்புத்தேடும் பறவை அவள்
முத்துக்கள் மூழ்கிக்கிடக்கும் சமுத்திரம் அவள்
கவிச்செம்மலுக்கு பிறக்காத கநிதாயினி அவள்
அரசனுக்கு பிறக்காத இளவரசி அவள்
மாளிகையில் வாழாத பெண்ணரசி அவள்
உலகில் இரு ஜீவனுக்கு தாய்,தந்தையெனும்
அங்கீகாரம் வழங்கிய செல்ல மகள் அவள்
பெண்மைக்குள் கருவாகி
உறவுக்கு உயிராகி சிறகில்லா சிட்டாய்ப்
பிறந்த தேவதைப் பெண் அவள்
என்னோடு என்றும்
என் நிழலாக நடமாடும் என்னவளே அவள்



கவிஞர் சனூபா தாஹிர்,தம்பலகாமம் திருகோணமலை(இலங்கை)

# எங்கே நிம்மதி?

மனித வாழ்வில் நிம்மதி என்பது பெரும் தேடலாகவே உள்ளது
நிம்மதியை நாட மனிதன் பல வழிகளில் முயற்சிக்கிறான்.

எங்கே நிம்மதி?

இறைவனின் சன்னதியிலா?
தாயின் கருவறையிலா?
இயற்கையின் மடியிலா?
அன்னையின் தாலாட்டிலா?



நண்பனின் தோள்களிளா?
காதலியின் அரவணைப்பிலா
மனைவியின் அன்பிலா
பிள்ளைகளின் மகிழ்ச்சியிலா?

பணத்திலா? குணத்திலா?
செல்வத்திலா? செல்வாக்கிலா?
வறுமையிலா? வஞ்சத்தில்லா?
போட்டியிலா? பொறாமையிலா?

தகுதியிலா? தன்மானத்திலா?
பட்டத்திலா? பதவியிலா?
மனிதத்திலா? மரணத்திலா?
அன்பிலா? பண்பிலா?
உதவியிலா? ஏமாளியிலா?

வார்த்தையிலா? கூறும் வாக்கினிலா?
நல்லவன் போல் நடிப்பிலா? ஏமாற்றும்
திறமையிலா? முன் ஒன்று பேசி பின் ஒன்று பேசும் பேச்சிலா?

எதில் நிம்மதி எங்கு தேடினாலும் மனிதனுக்கு
என்றும் கிடைக்காத பொக்கிஷம் நிம்மதி.

நிம்மதியை தேடி தேடி மனிதனின் மகிழ்ச்சி தொலைந்தது தான் மீதம்
இருக்கும் நிலை கொண்டு முன்னேறு மனிதா.

அடுத்தவரை பார்த்தால் உன்னால் முன்னேற முடியாது
நிம்மதியிழந்து வழி தெரியாமல் இருட்டில் தவித்து விடுவாய்.

உன் செயலை சரியாக செய்
நிம்மதி உன்னிடம் தானாக வந்து சேரும்.

கவிஞர் ர.ரமேஷ்,திருப்பூர்

# இனி ஒரு விதி செய்வோம்!

யாருக்கு?
செய்த விதிகளெல்லாம்
என்னவாயிற்று?
சனநாயகம் பணநாயகமானது
மக்களாட்சி மாக்களாட்சியானது.
ஏழைகளை நசுக்கி
கோழைகளாக்கும்
சுதந்திரம் தந்ததுதான் என்ன?
ஊடகங்களின் நாடகங்கள்;
நடிகர்களின் நல்லவர் வேடங்கள்;
நோட்டுகளுக்காய் மக்கள்;
ஓட்டுகளுக்காய் அரசியல்வியாதிகள்.
அப்பப்பா.
சதிகளே இங்கே விதிகளாகின்றன.
காந்தியின் மண்ணில்
கோட்சேக்களின் தோட்டாக்களால்
புதிய இந்தியா
தினம் தினம் பிறக்கிறது.
அரைகுறை குழந்தையாய்.
ஆயின்
தீர்வுதான் என்ன?
அம்மாக்களால்தான்
இங்கே ஆயிரம் பிரச்சனைகள்,
ஆங்கே அவர்களை
அன்னை தெரசாக்களாக்குவோம்.
தொலைக்காட்சி தொடர்களில்
தொலைவோரை மீட்டு,
அம்மாக்களிலிருந்து
அன்னைகளாக்குவோம்.
விதிகளை வெல்வோம்!




கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி

# துளிகளில் துளிர்த்த அன்பு

போராட்ட வாழ்க்கையில் போராடி வருகையிலே
போரிட்டு எதிர்த்தவர்கள் முன் உயர்ந்திடவே
போர்வை அகற்றி வியர்வையில் குளித்து
போனதை தள்ளி வருவதை எதிர்கொண்டு

குத்தி கிழித்தவர்களுக்கு தக்க அடிகொடுக்க
குதித்து எழுந்து வலிகளோடு போரிட்டே
குடையாக வெற்றி வந்து காக்கவே
குண்டாக வார்த்தைகள் காயப்படுத்தி விடவே



சறுக்கு மரமாக வாழ்க்கை வழுக்கவே
சலிக்காது ஓட்டப்பந்தயத்தின் ஓடும் வீரனாகியே
சக்கரை பாகாக வாழ்க்கை இனிக்கவே
சரமாரியாக புயல் போல் தாக்கவே

நோக்கம் முழுதும் வெற்றியை நோக்கியே
நோய் கிருமியாக துன்பம் அரிக்கவே
நோவினையுடனும் முயற்சியோடு எதிர்த்துப் போரிடவே

அறியாத பதவியும் கையில் வந்ததே
அடுக்கு அடுக்காக விருதுகள் குவிந்ததே
அறியாமலே மகிழ்ச்சியில் கண்ணீர் ஊற்றானதே

கவிஞர் ஜஸீரா ஜலீல்,மலேசியா

# பனித்தூவும் காலை

புகையின் உரசலில்
பாதைகள் மலர்ந்தனவோ
துளிதுளியாய் முத்தம்
இஷ்டம் போல்



முத்துமுத்தாய் பூரிப்பில்
முகவரியற்ற முத்தம்
கலைந்து காணாமல்
கதிரவன் மடிக்குள் மறைந்து

இதழ்மடித்து புகைப்பூ சூடிய
ஆதவனின் அழகு
இன்றைய பாதையில்
பனிப்பூவின் ராகம் கவிதையாய்

இயற்கையின் சிணுங்களில்
இதயம் பறந்தது
மயக்கத்தின் விடியல்
மடிதேடும் பட்சிகள் குளிரில்
குளித்து குளிரை குடித்து
தவறாத இன்னிசைமழையும்

விழிகளில் இன்பம்
எத்துணை எத்துணை துயரமும்
துடைத்துப் போகுமோ

இயற்கையழகின் எழிலோ
ஏழிசைப்
படித்து தாளம் போடுது

இழையுதே மனம்
மறுக்காத தேடலே
மற்றவை மறந்து மனதும் மறந்து
பொங்கும் புதுவோசையில்
பூவாய் வெடிக்கும்
புத்தும் புதிது புதிதாய்
காலையும் கவிதை மீட்டுதே

எழுதாமலே வடிக்கும்
இளந்தூரிகை வாசம்
இயற்கையின் நேசம்
நித்யப்படியில் குறையாது
குலுங்கிச் சிரிக்குது

கவிஞர் சுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# களவியல்

யாரும் அறியாத நேரத்தில்
இரு உயிர்கள் மட்டும் போரிடும்
வார்த்தையால் அல்ல மௌனத்தால்
இந்த போரினால் விளைவது ஊடல் அல்ல
இரவு நேரத்தில் எண்ணிலடங்கா நட்சத்திரம்
அவர்களின் காதலின் எண்ணத்தை அளந்து விடும்
மதி அழகியே மிஞ்சிப் கூடியது என
கொலைக் கற்பனைகளை ஊட்டி
காதல் கோட்டையாய் மாற்றி
என்றென்றும் அழியாத ஆசனத்தில்
என்றும் அரசனாய் வீற்றிருப்பேன்
உன் காதல் சோலையிலே.



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# பிள்ளை நிலா

அன்பின் சிரிப்பில்
ஆனந்தம் கண்டேன்
இனிய குரலில்
ஈரத்தைக் கண்டேன்
உயர்ந்த உன் பண்பை
ஊரறியக் கண்டேன்
எழுச்சிமிகு பார்வையில்
ஏற்றத்தைக் கண்டேன்
ஐயமில்லா இதயத்தில்
ஒழுக்கத்தைக் கண்டேன்
ஓங்கிய குரலில்
ஔவையாரைக் கண்டேன்
பொலிவுடன் நிறைந்த
நிலவில் உன்னைக் கண்டேன்



கவிஞர் தி.சரவணன்,சங்கரன்கோவில்

# தனிமையின் கனம்

எவருக்கும் கேட்காது
எப்படி நடிக்கிறது
துடிக்கும் இதயம்

தடதடக்கும் ஓசை
எனக்கு மட்டும்
தனக்குள் இசைந்தபடி

தொண்டைக்குழி
தைத்த முள்ளென
வார்த்தைகள் சிக்கி
வரி பிறழ்ந்தது

காற்றில் உலவியும்
விழுங்கிய எச்சமாகி
தொண்டைக்குழி
முள்ளில் தைத்து
மௌனத்தில்
மெல்ல மறைந்தது

புரியும் முன்
ஒருமாதிரி அவதி
புரிந்த பின்
அவதியின் நிறம் வேறு



ஒரு கண் அறிந்த சேதி
மறு கண் உரைக்குமோ யென

ஒன்றையொன்று
ஓரப்பார்வை கண்டு
ஓரங்க நாடகம்
நடத்தி விழிக்கின்றது

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# பெருமிழலைக்குறும்ப நாயனார் புராணம்

வீதிகள் தோறும் திருநீற்றின் பிரகாச மணம் கமழும் நகரம் அது
சாதிகள் இரண்டு என்ற குல தர்மத்தில் மக்கள் வாழும் நகரம் அது
சோதியான சிவனை நினைந்து வழிபட்டு  வாழும் நகரம் அது
தீது அறியா பெருழலை நாட்டில், மழலை எனும் நகரம் அது

இந்த திருத்தலத்தில் தலைவர் பெருமிழலை குறும்ப நாயனார்
எந்த கோலத்தில் வந்தாலும் சிவனடியாருக்கு தொண்டு செய்வார்
வந்த அடியார்கள் மனம் மகிழ வரவேற்று அவர் பாதம் தொழுவார்
சந்தனம் பூசி திருவமுது செய்து திரவியங்களுடன் வழி அனுப்புவார்

உமையொரு பாகனான சிவபெருமானை  தியானித்து வாழ்பவர்
அமைந்த நல்லொழுக்கத்தில் தவ  யோக சித்தராக வாழ்பவர்
அமைவதெல்லாம் அவனன்றி ஏதும் இல்லை என்று வாழ்பவர்
அமைதியே ஆனந்தம் என்றுணர்ந்து சிவ யோகத்தில் வாழ்பவர்

திருமணமேடைக்கு மணாளனைப் பார்த்து நீ என் அடிமை என்றார்
தருணம் பார்த்து தடுத்தவரை பித்தனே பேயனே ஏசினார் சுந்தரர்
பெருமையுடன் சிரித்த பிறைசூடன் பித்தா எனப்  பாடும்படி கூறினார்
வருக'', சுந்தரரை தோழனாக ஏற்று பணிவிடை செய்தார் இறைவன்



பெருமிழலை சுந்தரர் பெருமைகளைக் கேட்டு  தன் மனதில் வரித்தார்
திருமணத்தை தடுத்து சுந்தரரை ஆட்கொண்ட  சிவ கதை கேட்டார்
பருவத்தில் ஏற்பட்ட காதலுக்கு தூது சென்ற சிவனை வியந்தார்
இருவருக்கும் நிலவிய தோழமை நெறிகேட்டு மெய் சிலிர்த்தார்.

கடவுள்  அருள் பெற்ற சுந்தரரையே தன மானசீக குருவாக்கினார்
படகு ஆற்றைக் கடக்க வேண்டுமானால்  படகோட்டி அவசியம்
உடலில் இருக்கும் ஆன்மா பிறவிக் கடலை கடக்க குருநாதர் தேவை
திடமான மனதில் சுந்தரரை நினைந்து  யோக மார்க்கத்தைக்கற்றார்

தினமும் சுந்தரரின் திருநாமத்தை உச்சரித்து பல சித்திகளை கற்றார்
மனம் புத்தி சித்தம் அகங்காரம்  வழி செல்லாமல் அறிவு வழி சென்றார்
கனம்பொருந்திய சுந்தர மூர்த்தி நாயானாரை நினைக்காத நொடி இல்லை
திடமான தியானம், தவத்தில் சுந்தரரையே தெய்வமாக  வணங்கினார்

மானசீக குருவானார் சுந்தரர் ஏகலைவனுக்கு துரோணர் போல
ஞான மார்க்கத்தில் அஷ்டமா சித்திகள் பெற்று சித்தரானார்
வானவர் போற்றும் யோகியானாலும் எளிமையாக காணப்பட்டார்
தான தருமங்கள் செய்து ஒரு சிவனடியாராகவே வாழ்ந்து வந்தார்

முக்காலும் உணரும் அருள் பெற்றார் தவயோகி குறும்ப நாயனார்
எக்காலத்திலும் சஞ்சரிக்கும் அவர் மனதில் ஒரு காட்சி ஓடியது
இக்கணமே சுந்தரர் தயாராகிவிட்டார் நாளை கயிலையில் முத்திபெற
அக்கணமே முடிவு செய்தார் அவருக்கு முந்தி,'' இன்றே நான் செலவேன்.''

பயின்ற நெறியில்  பிரம்ம நாடி வழியே சித்தம் செல்லும்படி  செய்தார்
உயிரை ஒரு நிலைப்படுத்தி மேலே லேலே கொண்டுவந்தார்
மயிலிறகு போல் அசைந்து அசைந்து நாசியில் சுவாசம் நின்றது
கயிலை மலையை சுந்தரருக்கு முந்தி அடைந்தார் பெருமழலை

கவிஞர் ந.திருக்காமு

# சுகம்

உன் பூப்போன்ற பாதங்களால்
என் முகத்தை
நீவிக் கொள்கிறேன்
அப்படியேனும் என் நிறம் சிவக்குமோ
உன் பிஞ்சு பாதாம் பட்டு!

நெஞ்சில் புதைத்துக் கொள்கிறேன்
உன் பிஞ்சு பாதங்களை
சற்று ஓய்வெடுக்க
பொழுதோடு வீடெங்கும்
வளைய வந்த வலி நீங்க!



காரைக் கவிஞர் எழிலி

# மீண்டும் மலருமா

அறிந்தும் புரிந்தும் தெரிந்தும் கொள்ள முடியாத
காலத்தில் மகிழ்ச்சி ஒன்றே அன்று.

வாழ்க்கையில் வளர்ந்த பின் வலி என்னும்
விழி நீரும் குருதி களமும் ஏற்குமா நெஞ்சம்.

மீள முடியாத நினைவுகளும் நிகழ்வுகளும்
வலி காயம் வாழ்க்கையை அளிக்குமா உழி.

தாய் தந்தை உடன் பிறப்பின் உறவை விட
ஓர் உறவு என்னும் நிலை ஆழம் அறியாமல் பாயும்.

பருவங்களின் பழரசம் பதுமை தொடக்கம்
காதல் என்னும் சுவடுகள் சூழலில்.



வரைந்து கொள்ள முடியாத காவியமாய்
கனவுகள் களம் காணும்.

அவள் முகமோ நான் தினமும் அறியும்
பிறை புன்னகைக்கும் நட்சத்திரம்.

எழுதிய குறுஞ்செய்திகளை விட
எழுத நினைக்கும் வலி செய்திகள் அதிகம்தான்.

உன்னுடன் வழியில்லா பயணம்
கற்பனை என்னும் உலகம்.

அனைத்தும் அருகினில் அன்று நீ மட்டும்
விலகிய நொடியினில் ஏனடி பெண்ணே.

பைந்தமிழ் இதழில் மீண்டும் மலருமா
உன் கற்பனைச் சுவடுகள்.

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# திருமண நாள்

என் வானில் நிலவொன்று முளைத்து
விழி திறந்து வழி தெரிந்து
கருப்பு நிலவோ ஒளியோ
ஒன்றை தேர்ந்தெடுத்தாள் மணவாளனாக
இன்று வரை நிலவொளி குறையவில்லை
என்னை சீர் நிமிர்த்தியவள் என் சீமாட்டி
வன்மையான சூழ்நிலைகளையும்
மென்மையாக கையாளும் என் வதுகையவள்
தினம் தினம் பூக்கும் குறிஞ்சி மலர்
அவள் அன்பு குறையா என் வாழ்க்கை
தெம்பு நிறைய ஜொலிக்கிறது
அவள் சுண்டு விரல் கோர்த்து
மெட்டி அணிந்து கெட்டி மேளம் கொட்டி
திருமாங்கல்யம் சூடிய நாள் இன்று.



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# உண்மை ஊமையாகுமோ

சந்தனப்பேழையில் உமிழ்ந்துவிட்டு
சாக்கடையில் நீராடுமிந்தக் கூட்டம்.

கற்பகதருக்களைத் தரித்து நித்தம்
களைகளைத் தேடி நீரூற்றுவதே நாட்டம்.

பூக்களைப் பார்த்தவர் துவம்சம் செய்து
முற்களைக் கொண்டு மாலை செய்வதே தேட்டம்

தேன்துளிகளைச் சிதறவிட்டு
விசத்தினை தேடி ஏனோ ஓட்டம்

தென்றலைத் துரத்தி விட்டு
புயலில் தானே நாட்டம்.



ஈந்துவப்போர் புறந்தள்ளி
கஞ்சர்களுடன் ஆட்டம்

நல்லவனை நசுக்கி விட்டு
புல்லரோடுதானே கொண்டாட்டம்

கொஞ்சம் பொறு காலம் ஒருநாள்
உண்மையை எடுத்துக் காட்டும்.

கவிஞர் மக்கொனையூராள்

# வீணை சிட்டிபாபு

வீணை யாழ் தம்பூராஃ பிடிலென்று நரம்பிசையின்
கருவிகளோ பலவுண்டே! கலைமகளின் கரத்தொளிரும்
சீர்மைத்து! பத்துதலை ஈழவேந்து ஈச்சுரனின்
சாமகானம் வீணைதனில் வித்தகத்தை உற்றவரே!
ஆந்திரத்தின் காக்கிநாடா வாழ்மாண்பார் செல்லபள்ளி
ரங்காராவ்நன் மைந்தர் ஹனுமானுலு மீட்டுவீணை
தன்னாலே ஏற்றமுற்றார்! பத்தொன்பது நூற்றினது
முப்பத்து ஆறதனில் அக்டோபர் பதின்மூன்று
தோன்றிட்டார் அன்னவரே! இமானிசங்கர ஸாஸ்திரிதன்
சீட்ராக பனிரெண்டு காண்வயதில் அரங்கேற்றம்
கண்டாரே ! லைலாமஜ்னு திரைப்பட சிறுகுழந்தை
நட்சத்திரம் ஆனாரே! சென்னைநகர் குடியேற்றம்
ஆனதுவே! திக்கற்ற பார்வதிபேர் திரைப்படத்தே
இசையமைத்தார் பதினொன்று வயதளவில்! தமிழ்தெலுங்கு
படங்களிலே வீணையிசை அமைத்திட்டார்! பாடலிலா
ஜெயகாந்தன் படமான உன்னைப்போல் ஒருவனிலே
பின்னணியிசை தேசீய விருதினையே பெற்றதுவே!
இவரிசையில் ஈர்ப்புண்ட மைசூரின் பேரரசர்
தாமணிந்த பொன்மாலை அணிவித்தார்! ஞாலமெலாம்
பற்பலவாம் மேடைகளில் மேதைமை நாட்டியவர்
ஞாலமெலாம் சுவைஞரீட்டம் தேன்கூட்டின் ஈக்களென
எண்ணிலராய்க் கொண்டிட்டார்! வீணைசிட் டிபாபுபேரார்
இன்றில்லை என்றாலும் பாடலார்வம் மிக்குள்ளோர்
நெஞ்சமெலாம் எந்நாளும் வாழ்ந்திருப்பார் அன்னவரே!
பத்தொன்பது நூற்றினது தொண்ணூற்று ஆறதனில்
ஐம்பத்து ஒன்பதகவை அவர்மறைவு நண்ணியதே!
இருபத்து ஏழாவது நினைவுநாள் காண்கின்றார் !
காற்றினிலே நேர்தவழ்ந்து காதுவழி நெஞ்சில்நிறை
அவரிசைதான் உள்ளவரை நீடிருப்பார் மாண்புகழால்!
வீணையொலி தன்னிலவர் வாழ்ந்திருப்பார் எந்நாளும்!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# ரோஜா

வண்ண நிறத்தில்
வடிவாக நீ
கண்ணைப் பறித்து
கவர்கிறாய் நீ



இதழ்களால் இனிக்கிறாய்
இதயங்களைத் தொடுகிறாய் நீ
முதல் காதல்சொல்ல
முன்னிலையில் நிற்கிறாய் நீ

விழாக்களின் போது
வினோதமாய் ஆகிறாய் நீ
உலவிடும் பொழுதுகள்
உள்ளத்தைக் கொய்கிறாய் நீ
பல சிகை அலங்காரத்தில்
பயன்பாடாயிருக்கிறாய் நீ



எங்கு சென்றாலும்
எதிலும் பதிலுமாக நீ
பங்கு கொள்ளுமிடத்திலும்
பார்த்திடத் தூண்டும் நீ

அழகாய்த் தோன்றினாலும்
அருகில் முள்ளோடு நீ
உன்னைப் பறித்தால்
குத்திடுவான் வலியினைத் தந்து
உதிரம் சொட்டினாலும்
உன்னைத் தொலைக்க மனமே வராது

ரோஜா ரோஜா ரோஜா

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# செல்லரித்துப்போன தமிழ் புத்தகத்தின் இறுதி நிமிடங்கள்

எத்தனையோ ஆண்டுகள் நூலகத்தில் காத்திருந்தேன்
உன் விழி என் மேல் படாதா
உன் விரல் மறந்தாவது என்னை தொடாதா என்று,
அதனால் வெக்கப்படுகின்றேன்.
தமிழே சரியாக உச்சரிக்கத் தெரியாத
தமிழனின் வாய்குள் சென்று மரணிப்பதை விட,
தமிழே பேசத் தெரியாத கரையானின் வாய்குள் சென்று
மடிவதை பெருமையாக ஏற்றுக் கொள்கிறேன்.



"கம்பம் எழுதிய காவியம் நான்"
"பாரதி தந்த பாட்டும் நான்"
"ஔவை கிழவியின் ஆத்திச்சூடி நான்"
"அகத்தியன் எழுதிய முதலும் நான்"
"வள்ளுவன் மடியில் தவழ்ந்தவன் நான்"
"வையகம் முழுதும் நிறைந்தவன் நான்"
காப்பியம் நான்
கவியும் நான்
கதையும் நான்
பருக அமுதமாய் இருக்கும்
மழலையர் பேசும் மொழியும் நான்
இத்தனையுமாய் இருந்து என்ன பயன்
இன்னும் இரண்டு பக்கங்கள்தான் இருக்கிறது
நான் மொத்தமாய் செல்லரித்து போக

அதற்கு முன் கடைசி ஆசையாய் ஒன்று.

என் அடையாளத்தை உன் அடையாளமாய் மாற்றிக் கொள்,
நான் மொத்தமாய் செல்லரித்துப் போன பிறகு,
THIS BOOK IS DAMAGED என்று மட்டும் எழுதி ஒட்டி விடாதீர்கள்.

**கவிஞர் ஆரூர். சிவ. மணிவேல்**

# உனக்காகவே நான் எழுதுகிறேன்

நான் தரும் என்னுடைய கவிதைகளை
என் கண் பார்க்கவே நன்றாகவே அது
உன் அழகு பதிவு கொண்டு
மின் அச்சிலே ஏற்றிட
பலரும் கண்டு

அதற்கென வண்ணம் தந்து உடன்
அற்புத புகைப்படம் சேர்த்து
மற்றவரும் ரசித்திடவே அதை நன்று
போற்றியே வாழ்த்துகிறேன் நின்று

இதுவும் ஒரு தமிழ் தொண்டு தானே
இதுபோல் நானும் எழுத வேண்டும் என்று
எதுவாகவும் இருந்தாலும் என் கவிதை
மதுபோல் மயங்கிடவே பலர் ரசிக்கவே



உனக்காகவே எழுதுகிறேன் தொடர் கவிதையை
எனக்கு இதில் தனி ஒரு மகிழ்ச்சிதானே
மணக்கும் முல்லையின் வாசனைப் போலே
மணக்கும் கவிவரிக்கோர்த்த என் மாலையும்

ஆம் அது என் தஞ்சையின் மண்வாசனை அல்லவா
உம் ரசனையும் கலந்திருக்குது அல்லவா
இன்னும் எழுதுவேன்
என் மூச்சு நிற்கும் வரை
இன்னும் நீ என் கவிதையை உடன் ஏற்கும் வரை

கவிஞர்அஞ்சல் தஞ்சை தாசன்,மடிப்பாக்கம் 91

# வெட்டுண்ட மரம்

நாளொரு பொழுதும் வந்தமரும்
பறவைகளின் கூச்சலிடும்
சப்தங்களின்றி,
சபிக்கப்பட்ட இடமாக
அனாதியாக காட்சியளிக்கின்றது,
வெட்டுண்ட மரம்.



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# பின்னோக்கிய நினைவுகள்

கொக்கரக்கோ என சேவல் கூவும் நேரமது
கேட்டு விழித்திடும் அதிகாலையும்
ஐந்து பைசா மிட்டாயும் அரைஞானில்
சிக்க வைத்திட்ட கால் சட்டையும்

காலணி இன்றி நடந்து சென்று வந்த பள்ளியும்
வயிற்றுப்பசிக்கு சத்துணவு
உணவு தனை அள்ளி உண்ட நேரமும்

கேலியும் கிண்டலுமாய் தோழமைகளுடன்
சுற்றித் திரிந்த தருணமும்
விடுமுறையில் பெற்றோருக்கு உதவிட
பணிக்கு சென்றிட்ட தருணமும்

உறவினர்கள் வருகையை எதிர்பார்த்து
ஏக்கத்தோடு காத்திருந்த நேரமும்
உடன் பிறப்புகளுடனே வந்திட்ட
பொய்க் கோபங்களும் செல்லச் சண்டைகளும்

அனைவரும் ஒன்றாய்
அமர்ந்துண்ணும் வேளைகளும்
திருவிழாவிற்கு உற்றமும் சுற்றமும்
அழைத்திடும் பாங்கும்

பிறர் மகிழ்ச்சியிலும் துயரத்திலும்
அனைவரும் பங்கெடுத்திடும் நாட்களும்
பின்னோக்கிய நினைவுகளாய்
நெஞ்சினில் நிறைந்திடுமே!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# பிரிவென்னும் துயரம்



தூரமே துயரம் இதில்
பிரிவு
சில மணி நேரமென்றால்
சிறு வருத்தம்
சில நாட்கள் எனில்
சிறையில் இருப்பதாய் நினைப்பு
மரண பிரிவெனில்
மனம் மறுக்கிறது
இறைவன் என்ற ஒன்று
இல்லை என.

கவிஞர் சுபாலா,வட்டத்தூர்




"மொழிஞாயிறு" தேவநேயப் பாவாணர்

அவர்களுக்கு புகழஞ்சலி

# தமிழிசைக் கலைஞர்

# கலைமாமணி ந.மா.முத்துக்கூத்தனார்

## பிறப்பும் நடிப்பும்



ந. மா. முத்துக்கூத்தன் திருச்சிராப்பள்ளி மாவட்டம் பொய்யாமணி ஊரில் 25.05.1925 இல் பிறந்தவர். பெற்றோர் நமச்சிவாயம், மாரியம்மாள். 1942 ஆம் ஆண்டு முதல் நாடகத்துறையிலும், திரைத்துறையிலும் இவர் தம் கலைப்பணிகளைத் தொடங்கியவர். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமியின் "கிருட்டினன் நாடக சபா", எஸ்.எஸ். இராசேந்திரன் நாடக மன்றம், எம்.ஜி.ஆர். நாடக மன்றம் ஆகிய நாடகக் குழுக்களில் இணைந்து நாடகங்களில் நகைச்சுவை வேடமணிந்து நடித்தவர்.

## நடிப்பும் பாடலும்

1952 ஆம் ஆண்டு திரைத்துறையில் நடிகராகப் பலவகையில் பங்களித்தவர். பராசக்தி, இரத்தக்கண்ணீர், இராஜராஜன், நாடோடி மன்னன், நல்லவன் வாழ்வான், புதியபூமி, தாய் மகளுக்குக் கட்டிய தாலி உள்ளிட்ட திரைப்படங்களில் பல்வேறு பாத்திரங்களில் நடித்தவர். திரைப்படப் பாடல்களையும் இக்கால கட்டத்தில் எழுதியவர்.

## வசனகர்த்தா

1953 இல் அம்மையப்பன், நாடோடி மன்னன், அரசிளங்குமரி, இராஜராஜன், கலையரசி, மந்திரவாதி, திருடாதே, அரசகட்டளை, நாகமலை அழகி உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் பாடல், உரையாடல் எழுதிய பட்டறிவும் இவருக்கு உண்டு.

## சாதிமறுப்புத் திருமணம்

ந. மா. முத்துக்கூத்தன் 24.10.1954 இல் பேரறிஞர் அண்ணா தலைமையில் மரகதம் அவர்களைச் சாதிமறுப்புத் திருமணம் செய்துகொண்டவர். ஒரு மகனும் ஐந்து மகள்களும் மக்கள் செல்வங்களாக இவர்களுக்கு வாய்த்தனர்.

# கலைமாமணி ந.மா.முத்துக்கூத்தனார்

தம்மால் பெரிதும் மதிக்கப்பட்ட கலைவாணர் என்.எஸ். கிருட்டினன் நினைவாகத் தம் மகனுக்குக் கலைவாணன் என்று பெயரிட்டார். மற்ற பிள்ளைகளுக்கும், பெயரப்பிள்ளைகளுக்கும் நல்ல தமிழில் பெயரிட்டு, தாமொரு தமிழனென்று அனைவருக்கும் அடையாளம் காட்டியவர்.

## வில்லுப்பாட்டு



என்.எஸ்.கிருட்டினன்-டி.ஏ.மதுரம்

ந. மா. முத்துக்கூத்தன் வில்லுப்பாட்டுக் கலையில் தேர்ந்த கலைஞராக விளங்கியவர். கலைவாணர் என் எஸ். கிருட்டினன் அவர்கள் பயன்படுத்திய வில் கருவியை, அவர்தம் துணைவியார் டி.ஏ.மதுரம் அவர்களிடமிருந்து அன்பளிப்பாக வாங்கி, வில்லுப்பாட்டுக் கலைக்குப் புத்துயிர் ஊட்டியவர். தென்தமிழகத்தில் வழக்கத்தில் இருந்த வில்லுப்பாட்டுக் கலையை வடதமிழகத்தில் பரவலாக்கிய பெருமை ந. மா. முத்துக்கூத்தன் அவர்களுக்கு உண்டு. கலைவாணரின் வாழ்க்கை வரலாற்றை வில்லுப்பாட்டு வடிவமாக்கி, அவர்தம் முதல் நினைவுநாளான 31.08.1958 இல் கலைவாணரின் இல்லத்தில் நிகழ்த்தினார்.

கலைவாணரின் வரலாறு வில்லுப்பாட்டில் பாடப்பட்ட பிறகு தமிழ் வரலாறு, அறிஞர் அண்ணா வரலாறு, "பெரியாருள் பெரியார்" என்னும் தலைப்பில் அமைந்த தந்தை பெரியாரின் வரலாறு ஆகியவற்றை வில்லுப்பாட்டு வடிவில் சென்னையிலும், தமிழகத்தின் பிற பகுதிகளிலும் வழங்கினார். அறிவியல் கருத்துகளையும், பகுத்தறிவுக் கருத்துகளையும் வில்லுப்பாட்டு வடிவில் மக்களுக்கு வழங்கி உழைத்தவர் ந. மா. முத்துக்கூத்தன் என்று குறிப்பிடலாம். இவர்தம் கலைச்சிறப்பு உணர்ந்து, புதுதில்லியில் அமைந்துள்ள தொலைக்காட்சி நிலையத்துக்கு அழைத்துச் சிறப்பிக்கப்பட்டவர்.

## மகன் மு. கலைவாணனுடன் வில்லுப்பாட்டு

ந.மா. முத்துக்கூத்தன் தம் மகன் மு. கலைவாணனுடன் இணைந்து கையுறைப் பொம்மலாட்டக் கலைவடிவில் நிகழ்ச்சிகளை நடத்தி, சிறந்து விளங்கியவர்.

# தமிழிசைக் கலைஞர்


# கலைமாமணி ந.மா.முத்துக்கூத்தனார்



மு.கலைவாணன்

மூட நம்பிக்கை ஒழிப்பிற்கு, "என்ன செய்யப் போறீங்க?" என்னும் தலைப்பிலும், பெண்கள் முன்னேற்றத்திற்குப் "பெண்ணின் பெருமை" என்ற தலைப்பிலும், தடய அறிவியலுக்கு "ஊமை சாட்சிகள்" என்ற தலைப்பிலும், சுற்றுச்சூழல் தூய்மைக்கு "எமன் ஏமாந்து போனான்" என்ற தலைப்பிலும், மக்கள் நல வாழ்வுக்கு, "நூறாண்டு வாழலாம் வாங்க" என்ற தலைப்பிலும் இவர் வழங்கிய பொம்மலாட்ட நிகழ்வுகள் தமிழகத்தின் கலை வரலாற்றில் என்றும் நினைவுகூறப்படும்.

## அண்ணாவும் பாரதிதாசனும்



பாவேந்தர் படைப்புகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட ந. மா. முத்துக்கூத்தன் பாவேந்தரின் "புரட்சிக்கவி" நாடகத்தைப் பொம்மலாட்ட வடிவில் நடத்தி அனைவரின் பாராட்டையும் பெற்றவர். அறிஞர் அண்ணாவின் "சந்திரமோகன்" நாடகத்தையும் பொம்மலாட்டக் கலைவடிவில் இவர் நடித்துக்காட்டியவர்.

## பொம்மலாட்டமும் வில்லுப்பாட்டும்




பொம்மலாட்டம்

தமிழ், தமிழரின் சிறப்புரைக்கும் "கொடை வள்ளல் குமணன்" என்ற பொம்மலாட்டத்தை மக்கள் மன்றத்தில் நிகழ்த்திய முத்துக்கூத்தனாரின் கலைப் பணியைப் பலரும் பாராட்டியுள்ளனர். இதுவரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளையும், மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பொம்மலாட்ட நிகழ்வுகளையும் நிகழ்த்தியவர்.



வில்லுப்பாட்டு

# தமிழிசைக் கலைஞர்

# கலைமாமணி ந.மா.முத்துக்கூத்தனார்

## விருதுகள்

இவர்தம் கலைச்சேவையைப் போற்றும் முகமாக, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் "கலைமாமணி" என்ற உயரிய விருதினை இவருக்கு வழங்கிப் பாராட்டியுள்ளது(1972).

1987 இல் சென்னைப் பகுத்தறிவாளர் கழகம் "பாரதிதாசன் விருதினையும்", தந்தை பெரியார் தமிழிசை மன்றம் "நற்றமிழ்க் கூத்தர் விருதினையும்" (1998), இலக்கிய வீதி அமைப்பு "தாராபாரதி விருதினையும்" (2002), ஆழ்வார்கள் ஆய்வு மையம் "தமிழ்ச்செம்மல் விருதினையும்" (2003) வழங்கிப் பெருமைசேர்த்தன.

## பாடல்கள் சில




நாடோடி மன்னன் திரைப்படத்தில்,
"செந்தமிழே வணக்கம் ...
ஆதி திராவிடர் வாழ்வினைச் சீரொடு விளக்கும்" என்னும் பாடலும்,

திரைப்பட நடிகை பானுமதி அவர்கள் பாடிய,
"சம்மதமா.. நான் உங்க கூடவர சம்மதமா?" பாடலும்,

அரசகட்டளை படத்தில்,
"ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும்
ஆதவன் மறைவதில்லை.
ஆடி வா ஆடிவா ஆடப்பிறந்தவளே
ஆடிவா" என்ற பாடலும்




"எத்தனை காலம் கனவு கண்டேன்
காண்பதற்கு - உன்னைக் -
காண்பதற்கு" என்ற பாடலும் இவர் இயற்றியவையாகும்.
தமிழ்த்திரையுலகில் இவரின் இத்தகு பாடல்கள் என்றும் நினைவுகூரப்படும் பெருமைக்குரியன.

அகர முதல

# தமிழிசைக் கலைஞர்

# கலைமாமணி ந.மா.முத்துக்கூத்தனார்

## ந.மா. முத்துக்கூத்தனின் தமிழ்க்கொடை:



1. பாதை மாறாத பாட்டுப் பயணம் (தன் வரலாறு)
2. தமிழிசைப் பாடல்கள்(தொகுப்பு)
3. பகை வென்ற சோழன்(நாடகம்)
4. இசை வெள்ளத்தில் எதிர்நீச்சல்(குறும் புதினம்)
5. மொழிகள் குல முதல்வி (தமிழ் மொழியின் சிறப்புரைக்கும் நூல்)
6. துணை நடிகர் துரைக்கண்ணு (நடிகர்களின் வாழ்க்கை பற்றியது)
7. எல்லாரும் நல்லா இருக்கணும்
8. நெல்லம்மா (கதை-விதை-கவிதை)

## நினைவு கூறும்

தமிழ்க்கலையுலகில் போற்றப்படும் கலைஞராக விளங்கிய ந. மா. முத்துக்கூத்தன் அவர்கள் 01.05.2005 இல் இயற்கை எய்தினார். ந. மா. முத்துக்கூத்தன் இயற்றிய திரைப்பாடல்களும், பிற கவிதைகளும், பொம்மலாட்டக் கலையும், வில்லுப்பாட்டு வடிவும் என்றும் இவரை நினைவு கூறும்.

நன்றி: muelangovan.blogspot.com



<u>எழுத்து</u>

அ.வில்சன், குறிஞ்சிக்குடி


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
பலவீனமானவர்கள்
வாய்ப்புகளுக்காக காத்திருக்கின்றனர்..
பலமானவர்கள்
வாய்ப்புகளை உருவாக்குகிறார்கள்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com